சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

I.P.No.11/2022

**PW 1 பிரகாஷ்** **14.07.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்று கேட்டால் ஜவுளி தொழில் மற்றும் வட்டி வரவு செலவு தொழில் செய்து வருகிறேன். நான் இந்து கூட்டுக்குடும்பத்திற்காக வருமான வரி கட்டி வருகிறேனா என்றால் கட்டி வருகிறேன். இந்த வழக்கில் கண்ட 1ம் எதிர்மனுதாரர் என்னிடம் கடன் வாங்கினாரா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரின் கணவர் ஶ்ரீதரன் வாங்கிய கடனை திரும்ப செலுத்த கோரி சேலம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1ம் எதிர்மனுதாரருக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் தேதி ஞாபகமில்லை. அந்த அறிவிப்பில் மனுச்சொத்தை ஜப்தி செய்துவிடுவேன் என்று கூறவில்லை என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு பின்னிட்டு 1 வரும் 7 மாதம் கழித்து தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்று சொன்னால் அதைப் பொருத்து தற்போது சரியாக ஞாபகமில்லை. 1ம் எதிர்மனுதாரர் கணவர் வாங்கிய கடனை வசூல் செய்ய அவ எண்.409/2021 வழக்கு தாக்கல் செய்து இந்த மனு சொத்துக்களையும் தீர்ப்பிற்கு முன்னிட்டு மனுதாக்கல் செய்திருந்தேன் என்று சொன்னால் சரிதான். மனு தாக்கல் செய்த விவரம் 1ம் எதிர்மனுதாரருக்கு எப்போது தெரிய வந்தது என்ற விவரத்தை இந்த மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் 2 ம் எதிர்மனுதாரருக்கு சொத்தை கிரயம் கொடுத்ததன் பின்னிட்டு தான் சேலம் மாவட்ட நீதிமன்றத்தில் ஜப்தி உத்தரவு

பிறப்பிக்கப்பட்டது என்றால் அது சரியல்ல. அந்த கிரயத்திற்கு முன்பே சொத்து ஜப்தி செய்யப்பட்டுவிட்டது. நான் சொல்வது தவறு என்று சொன்னால் அது சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் மனுச் சொத்தை 08.04.2022 அன்று கிரயம் பெற்றுள்ளார் என்று சொன்னால் அது சரிதான். அதற்கு 4 மாதம் கழித்து 01.08.2022 அன்று தான் சொத்தைப் பொருத்து ஜப்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் தேதி ஞாபகம் இல்லை. இந்த மனு தாக்கல் செய்யும் போது சேலம் மாவட்ட நீதிமன்றத்தில் எந்த ஜப்தி உத்தரவும் நிலுவையில் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் கணவர் வழங்கிய கடனுறுதி சீட்டின் அடிப்படையில் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் அது சரிதான். 1ம் எதிர்மனுதாரர் கணவர் வாங்கிய கடனைப் திரும்ப செலுத்த 1ம் எதிர்மனுதாரர் எவ்வித கடனுறுதி சீட்டும் எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் எழுதிக்கொடுத்ததாக கூறும் மசாஆ 8ன் அடிப்படையில் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணத்தில் 1ம் எதிர்மனுதாரரின் கணவர் கடன் வாங்கிய விவரமோ தொகையோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் கணவர் வாங்கிய கடனை திருப்பி செலுத்துவதாக அந்த ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல, அது குறிப்பிடப்பட்டுள்ளது. மசாஆ 8 ஆவணத்தில் 1ம் எதிர்மனுதாரரின் கணவர் பெற்ற கடனை பொருத்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு மனுச் சொத்துக்களை கிரயம் பெறுவதற்கு முன்பு அவ எண்.409/2021 என்ற வழக்கில் மனுச் சொத்துக்களை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய மனு தாக்கல் செய்த விவரம் தெரியாது என்று சொன்னால் அது சரியல்ல. அவ்வாறு 2ம் எதிர்மனுதாரருக்கு தெரியும் என்ற விவரத்தை பொருத்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். சேலம் மாவட்ட

நீதிமன்றதில் தாக்கல் செய்த மனுச் சொத்தில் உள்ள சென்னையில் உள்ள 2 வீடுகளை ஜப்தி செய்ய குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த வீட்டின் மதிப்பு ரூ.2 கோடி இருக்கும் என்று சொன்னால் அவ்வளவு இருக்காது. நான் தாக்கல் செய்த வழக்கின் அடிப்படையில் 1ம் எதிர்மனுதாரரின் கணவர் தர வேண்டிய தொகையானது ரூ.30 லட்சம் என்றால் சரிதான். அதில் ரூ.5 லட்சம் போக மீதியுள்ள ரூ.25 லட்சம் தர வழக்கு தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரிதான். மனுச் சொத்துக்களை கிரயம் பெறும் போது 2ம் எதிர்மனுதாரர் தீர விசாரித்து தான் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் எதிர்மனுதாரரின் கணவருக்கும் உள்ள கடன் பிரச்சனைக்கும் 2ம் எதிர்மனுதாரருக்கும் எந்த சம்மமந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மனுச் சொத்து 1ம் எதிர்மனுதாரர் கணவர் வாங்கிய கடனுக்கு கட்டுப்படாது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் கணவர் தாக்கல் செய்த வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்ட வழக்கு என்பதால் மனுச் சொத்தை அபகரிக்க வேண்டி 1ம் எதிர்மனுதாரரோடு கூட்டு சேர்ந்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் உரிய மறுபயன் செலுத்தி கிரயம் பெற்றுள்ளார் என்றும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி